19.09.2023 பி.வா.சா.1 ஜி.கேசவன் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை (ஒ.எஸ்.எண். 51/2019)

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் 1ம்பிரதிவாதியின் மகன் ஆவேன். 3ம்பிரதிவாதி எனது அண்ணன் ஆவார். 4ம்பிரதிவாதி எனது அண்ணனின் மனைவி ஆவார். போத்திராஜ் என்பவர் 2வது அயிட்ட வழக்கு சொத்தை பொறுத்த வரையில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் 2வது அயிட்ட சொத்தானது ஸ்தலத்தில் இல்லை. அவ்வாறு 2வது அயிட்ட சொத்தானது ஸ்தலத்தில் உள்ளது என்று தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அதற்காகத்தான் தாக்கல் செய்துள்ளார் ஆனால் அது போன்ற சொத்து அந்த இடத்தில் இல்லை அது பொய்யானது ஆகும். வழக்கு சொத்துக்கள் ஆதியில் வெங்கிடசாமி நாயக்கருக்குப் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். வெங்கிடசாமி நாயக்கரிடமிருந்து பெரியசீனிவாசக நாயக்கர் கிரையம் பெற்றுள்ளதற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அதில் குறிப்பிடப்பட்டுள்ள விஸ்தீரணம் அளவு தவறானது ஆகும். அந்த ஆவணமானது வா.சா.ஆ.1 1955 ஆம் வருடம் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தின் அளவினை படித்துப்பார்த்துள்ளேன் என்றால் சரிதான். அந்த ஆவணத்தின்படிகிழமேல் 50 தச்சுமுழம், தென்வடல் 14.25 தச்சுமுழம் என்று உள்ளது என்றால் சரிதான். அந்த அளவுகோளின்படி ஒரு தச்சுமுழம்என்பது 2.75 அடி என்றால் சரிதான். அந்த ஆவணத்தின்படி 50 தச்சுமுழம் என்பது 137.5 அடி ஆகும் என்றால் சரிதான். 14.25 தச்சு முழம் என்பது 39 அடி ஆகும் என்றால் சரிதான். பெரியசீனிவாசக நாயக்கரிடமிருந்து கொண்டம்மாள் என்பவர் 1960 ஆம்ஆண்டு வா.சா.ஆ.2 ஆவணத்தின்படி கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் உள்ள அளவுகோளின்படி வா.சா.ஆ.2 ஆனது கிரையம் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். கொண்டம்மாள் என்பவர் காலம்சென்றுவிட்டார். அவருக்கு கெங்கம்மாள் என்ற ஒரே வாரிசு உள்ளார்

என்ற விவரம் எனக்குதெரியும் என்றால் சரிதான். இவ்வழக்கின் வாதி கெங்கம்மாளிடமிருந்து வழக்கு சொத்துக்களை வா.சா.ஆ.3 ன் மூலமாக கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்ததற்கு பிறகு வாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்களை நான் படித்துப்பார்த்தேன் என்றால் சரிதான்.

50 தச்சுமுழமான 137.5 அடி 2 பகுதியாக பிரிக்கப்பட்டு 126 அடி ஒரு பகுதியாகவும், மீதமுள்ள 11.5 அடி 2 வது பகுதியாகவும் இரண்டு அயிட்ட சொத்துக்களாக மேற்படி ஆவணத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகோளானது தவறானது ஆகும். 2 வது அயிட்டச்சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல, 2 வது அயிட்டச்சொத்தானது எனக்குப் பாத்தியப்பட்டதாகும். 2 வது அயிட்டச்சொத்தும் அதன் தொடர்ச்சியாக கீழ்பக்கமுள்ள சொத்தும் எனக்குப் பாத்தியப்பட்டதாக கட்சி செய்கிறேன் என்றால் சரிதான். அவ்வாறு அந்த சொத்து பாத்தியப்பட்டது என்பதற்கு எங்களிடம் என்ன ஆவணம் உள்ளது என்றால் எங்களிடம் பதிவு ஆவணம் எதுவும்இல்லை, அது எங்களுடைய பூர்வீகச்சொத்தாகும். அந்த சொத்தானது என்னுடைய தாத்தா நாராயணசாமி நாயக்கர் மற்றும் அவரை தொடர்ந்து ரெங்கசாமி நாயக்கருக்குப் பாத்தியப்பட்ட சொத்தாகும். வழக்கு சொத்து 1 வது அயிட்டச்சொத்தின் சர்வே எண்.329/53, 2 வது அயிட்டச்சொத்து 329/64 என்றால் சரிதான். 329/53 சர்வே எண்ணிற்கு கீழ்புறம் 329/64 மற்றும் 329/65, வேறு நபருக்குப் பாத்தியப்பட்டதாகும் சர்வே எண்.329/66 பாதையாகும். பூர்வீகச்சொத்து என்று கூறுவதற்கு பட்டா உள்ளது ஆனால் நீதிமன்றத்தில் அதனை தாக்கல் செய்யவில்லை. எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடங்கல் பதிவேடு ஆவணம் ஆகும். பொது தகவல் அறியும் சட்டத்தின் கீழ் ஆவணங்களின் நகல் கேட்டுப்பெறப்பட்டு பி.வா.சா.ஆ.3 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்களுக்கு பூர்வீகமாகப் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றுகூறுவதற்கு தற்போதாவது ஆவணம் உள்ளதா என்றால் எனது தந்தையின் இளைய சகோதரர் கிருஷ்ணராமானுஜம்

அவர் மகன் குருசாமிக்கு சர்வே எண்.329/64 ல் ஒரு பகுதியானது



தானசெட்டில்மெண்ட்டாக எழுதிக்கொடுத்துள்ளார். இதை தவிர அந்த சர்வே நம்பர் குறித்து வேறு பதிவு ஆவணம் இல்லை. வருவாய்துறையின் மூலமாக கிடைக்கப்பெற்ற ஆவணங்களில் ஏற்பட்டுள்ள சில பிழைகளை எங்களுக்கு சாதகமாக எடுத்துக்கொண்டு அந்த சொத்தானது எங்களுக்குப் பாத்தியப்பட்டது என்று கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல.

வழக்கில் உள்ள 2 வது அயிட்ட சொத்தானது பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின் மூலமாக சுமார் 65 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக வாதி மற்றும் அவரின் முன் உரிமையாளர்கள் தொடர்ந்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. வாதியின் அனுபவத்தில் தற்போது தென்வடல் மேல்புறம் 8.8.மீட்டர், கீழ்புறம்தென்வடல் 9.6 மீட்டர், தென்புறம் கிழமேல் 40.2 மீட்டர் வடபுறம் கிழமேல் 40 மீட்டர் ஆகியவைதான் வாதியும், வாதியின் முன்உரிமையாளர்களுக்கும் பாத்தியப்பட்டு அனுபவத்தில் உள்ள சொத்தாகும். வாதியின் அனுபவத்தில் உள்ள சொத்தானது வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சாட்சியம் அளிப்பது போல் 1 வது அயிட்டச்சொத்தில் 126 அடி நீங்களாக மேலும் 5 அடி கீழ்பக்கம்உள்ளது என்றால் சரிதான். அந்த 131 அடி முழுவதுமாக வாதி காம்பவுண்டு சுவர் கட்டியுள்ளார். வாதி அதனைதொடர்ந்து வாசல் வைத்தார் அதனை நாங்கள் தடுத்த காரணத்தினால் கதவை வைத்து மூடிவிட்டு தற்போது இந்த வழக்கினை எங்களுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார். வாதி வீடு கட்டி சுமார்15 வருடங்கள் இருக்குமா என்றால் 2006 ஆம்ஆண்டு கிரையம் பெற்று 2,3 ஆண்டுகள் கழித்துஅதில் வீடு கட்டினார். வாதி வீட்டினை கட்டும்போதே காம்பவுண்டு சுவர் கட்டிவிட்டாரா என்றால் இடங்களை அளந்து பார்த்ததற்கு பிறகு அவருடைய இடத்தில் காம்பவுண்டு சுவர் கட்டிக்கொண்டார். வாதி 12,13 ஆண்டுகளுக்கு முன்னரே காம்பவுண்டு சுவர் கட்டி அதில் கதவு வைத்துவிட்டார் என்றாலும் தற்போது 2 வது அயிட்ட சொத்தினை பொறுத்து நாங்கள் புதியதாக தாவா

செய்ததால் வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. 2 வது அயிட்ட சொத்தும் பதிவு ஆவணத்தின் படி ஸ்தலத்தில் உள்ளது என்றாலும் அதனை அபகரிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. 2 வது அயிட்டச்சொத்தினை பொறுத்து எவ்வித பதிவு ஆவணமும் இல்லாமல் நான் கட்சி செய்வது நான் கட்சி செய்வது சட்டப்படி ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல.

தற்போது அந்த இடத்தினை நீதிமன்றத்தின் மூலமாக நியமனம் செய்யப்பட்ட ஒரு வழக்கறிஞர் ஆணையர் மூலமாக அதனை அளவிடுவதற்கு எனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை. நிலத்தில் இருக்கும் இடத்திற்கு எதிராக உள்ள தாவாச்சொத்தினை 2 வது அயிட்டச்சொத்தினை பொறுத்து உண்மைக்கு புறம்பாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. 2 வது அயிட்டச்சொத்தினை பொறுத்து வாதி அனுபவம் செய்வது குறித்து எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் ஆட்சேபனை உள்ளது மேலும் 2 வது அயிட்டச்சொத்து என்ற ஒரு சொத்தே கிடையாது மேலும் வாதியின் அனுபவத்தில் கிடையாது. மேற்படி சங்கதிகள் குறித்து உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)A.முகமது சாதிக்உசேன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
19.09.2023.